**நாளை விவசாயிகள் குறைதீர்வுநாள் கூட்டம்**

First Published : 18 Aug 2011 09:09:31 AM IST

விழுப்புரம், ஆக.17: விவசாயிகள் குறைதீர்வுநாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது என்று மாவட்ட ஆட்சியர் கா.த.மணிமேகலை தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை மனுவாகக் கொடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

**கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும்: கரும்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

First Published : 18 Aug 2011 09:08:10 AM IST

செஞ்சி, ஆக. 17: கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளின் பேரவைக் கூட்டம் செஞ்சியில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, சங்க அமைப்பாளர் பி.வசுபாலன் தலைமை தாங்கினார். கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் வி.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் என்.சுப்பிரமணியன் ஆகியோர் விவசாயிகள் சந்திக்கும் பிரச்னை குறித்து விரிவாக பேசினர்.

ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் செம்மேடு ஆலை மட்ட புதிய நிர்வாகிகளாக சிறப்புத் தலைவராக கோ.மாதவன், தலைவராக டி.ஆர்.குண்டுரெட்டியார், செயலராக எம்.கணபதி மற்றும் பொருளராக எம்.அந்தாரி உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: கரும்பு வெட்டுக்கூலி, வாகன வாடகை ஆலை ஆகியவற்றை நிர்வாகமே ஏற்க வேண்டும்.

கரும்பு வெட்டி முடிந்த ஒரு வாரகாலத்தில் தொகை பட்டுவாடா செய்ய வேண்டும். உரம் மற்றும் பூச்சி மருந்தை ஆலை நிர்வாகமே வழங்க வேண்டும்.

ஆண்டுதோறும் தீபாவளிக்கு முன், ஆலை நிர்வாகம், கரும்பின் மொத்த எடையை கணக்கிட்டு டன் ஒன்றுக்கு ஒரு கிலோ சர்க்கரை வீதம் போனஸ்ஃக வழங்க வேண்டும்.

கரும்பு பயிரிட ஊக்குவிக்க நடவு கரும்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.2,500-ம் மருத்தாம்பு கரும்புக்கு ரூ.1000-ம் மானியமாக வழங்கி வந்ததை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்க வேண்டும்.

10.8.2011 அன்று நடந்த கரும்பு விவசாயிகளின் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டவாறு தனியார் எடை மேடையில் விவசாயிகளின் கரும்பை எடை போட ஆலை நிர்வாகம் அனுமதிக்க வேண்டும். அல்லது சர்க்கரை எடை போடும் மேடையில் அனுமதிக்க வேண்டும்.

காலியாக உள்ள கள அலுவலர்கள் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

**23-ல் முயல் வளர்ப்பு சிறப்புப் பயிற்சி**

First Published : 18 Aug 2011 09:19:27 AM IST

காஞ்சிபுரம், ஆக. 17: ஏனாத்தூரில் முயல் வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி வகுப்பு வரும் 23-ம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து பயிற்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் சுந்தரராமன் வெளியிட்ட அறிக்கை:

கால்நடை பண்ணை வளர்ப்பில் முயல் வளர்ப்பு மிகவும் லாபகரமானத் தொழிலாகும். முயல்கள் நார்ச்சத்து மிக்கத் தாவரங்களையும், வீட்டில் வீணாகும் காய்கறிகள் முதலிவற்றையும் உட்கொண்டு தரமான புரதச்சத்து மிக்க இறைச்சியை அளிக்க வல்லது. குறைந்த இடத்தில், குறைந்த முதலீட்டில் எளிய பராமரிப்பில் முயல்களை வளர்க்கலாம். முயல் இறைச்சியில் கொழுப்புச்சத்து மிகக் குறைவாக உள்ளதால் ரத்தக் கொதிப்பு மற்றும் இதய நோய் உள்ளவர்களுக்கு ஏற்றதாகும்.

முயல் வளர்ப்பின் மூலம் கிடைக்கும் உற்பத்தி பொருள்களான ரோமம், தோல் மற்றும் இறைச்சிக்கு விற்பனை வாய்ப்பு அதிகம். எனவே ஆர்வமுள்ளவர்கள் இத் தொழிலில் ஈடுபடலாம். முயல் வளர்ப்பு பற்றிய ஒரு நாள் இலவசப் பயிற்சி வரும் 23-ம் தேதி காஞ்சிபுரம் மாவட்டம் ஏனாத்தூரில் அமைந்துள்ள உழவர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படும் என்றார்.

**உழவர் சந்தைக்கு வர விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 18 Aug 2011 09:22:19 AM IST

விருத்தாசலம், ஆக. 17: விருத்தாசலம் உழவர் சந்தைக்கு விவசாயிகள் அதிக அளவில் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்யுமாறு வேளாண்மை துணை இயக்குநர் தனவேல் கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விவசாயிகள் தாங்கள் பயிரிடும் காய்கறிகள், பழகங்கள், தேங்காய் மற்றும் கீரைகளை நேரடியாக உழவர்

சந்தையில் விற்பனை செய்து லாபம் அடைந்து வருகின்றனர். தற்போது ஆடிப்பட்டத்தில் கத்தரி, வெண்டை, புடலங்காய், பூசணி, பாகல் மற்றும் கீரை பயிர் செய்யும் விவசாயிகள் உழவர் சந்தையை அனுகி உழவர் அடையாள அட்டைபெற்று உழவர் சந்தையில் காய்கறிகள் விற்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உழவர் சந்தையில் விவசாயிகளின் வருகை மற்றும் காய்கறிகளின் வரத்தினை அதிகரிக்க இம்மாதம் பெருந்துறை, பெரியகோட்டுமுளை, தொட்டிக்குப்பம் மற்றும் எருமனூரில் கிராம கூட்டம் நடத்தப்பட்டது. உழவர் சந்தைக்கு பொதுமக்களின் வருகையை அதிகரிக்க செல்லியம்மன் வீதி, ஆயியார் மடம்தெரு, புதுப்பேட்டை, நாச்சியார்பேட்டை உள்ளிட் பகுதிகளில் நகர்புற நுகர்வோர் கூட்டம் நடத்தப்பட்டது.

உழவர்களும், பொதுமக்களும் உழவர் சந்தையை பயன்படுத்தி பயனடைய வேண்டும் என்று அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**நாளை விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

First Published : 18 Aug 2011 09:23:39 AM IST

கடலூர், ஆக.17: கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம், வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று, மாவட்ட ஆட்சியர் வே. அமுதவல்லி அறிவித்து உள்ளார். இது குறித்து ஆட்சியர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம், கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில், 19-8-2011 அன்று காலை 10-30 மணிக்கு நடைபெறும்.

கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது வேளாண் சார்ந்த குறைகளையும் கோரிக்கைகளையும், இக்கூட்டத்தில் தெரிவிக்க அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். எழுத்து பூர்வமாக மனுக்களாகவும் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் உயர் அலுவலர்கள் பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கைகள் எடுக்கவும், மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இந்த வாய்ப்பை கடலூர் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று அந்த செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**தமிழகம், புதுவையில் மழைக்கு வாய்ப்பு**

First Published : 18 Aug 2011 01:53:04 AM IST

சென்னை, ஆக.17: தமிழகம் மற்றும் புதுவையில் வியாழக்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 35 டிகிரி செல்சியஸ் அளவு இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**தமிழகத்தில் 10 உழவர் மையங்கள்: அமைச்சர் செங்கோட்டையன்**

First Published : 18 Aug 2011 01:26:17 AM IST

சென்னை, ஆக. 17: தமிழகத்தில் 10 உழவர் மையங்கள் அமைக்கப்படும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் வேளாண்மைத் துறை மீதான மானியக் கோரிக்கைகளுக்கு பதிலளித்து புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த தகவல்களை விவசாயிகள் உடனுக்குடன் ஒரே இடத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளும் வகையிலும், வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள் குறித்த சந்தேகங்களை நீக்கும் வகையிலும், வேளாண்மைத் துறையின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து முதல்கட்டமாக ரூ.15 கோடியில் 10 உழவர் மையங்கள் அமைக்கப்படும்.

பெருநகர மக்களுக்கு காய்கறிகள்: பெருநகர மக்களின் அன்றாட காய்கறி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.17 கோடி மதிப்பில் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இதன்படி, சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களில் காய்கறி விற்பனை மையங்கள் தொடக்கப்படும். இதன்மூலம், பெருநகர மக்களுக்கு காய்கறிகள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை சேமித்து, பாதுகாத்து, விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூட சேமிப்பு கிடங்குகள் உதவுகின்றன. விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், ரூ.82 கோடியில் 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நவீன கிடங்குகள் அமைக்கப்படும்.

மாவட்டங்களில் பல்வேறு திட்டங்கள்: கிருஷ்ணகிரி மாவட்டம் தளி பேரவைத் தொகுதிக்கு உள்பட்ட அரசு தோட்டக் கலைப் பண்ணையில், ரூ.2 கோடி மதிப்பில் மலர்கள், காய்கறி பயிர்கள் பசுமைக் குடில்களில் சாகுபடி செய்யப்படுவதுடன், மலர் சாகுபடிக்கு மாதிரி செயல் விளக்க மையமும் அமைக்கப்படும்.

தமிழகத்தில் 10 மாவட்டங்களில் இயங்கி வந்த விதை சுத்திகரிப்பு நிலையங்கள் இப்போது சரிவர இயங்காத நிலையில் உள்ளன. விவசாயிகளுக்கு தரமான விதைகளை உற்பத்தி செய்து உரிய காலத்தில் வழங்கும் வகையில் இந்த விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.5.25 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த கையேடு: தமிழகத்தில் வேளாண்மைத் துறையின் கணக்கெடுப்புப்படி, 88 லட்சம் விவசாயிகள் உள்ளனர். அவர்கள் குறித்த விவரங்கள், அவர்களது நிலங்களுக்கான மண் வளம், உரப் பரிந்துரை, இடுபொருள் விநியோகம், நுண்ணூட்டச் சத்து போன்ற விவரங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கையேடு முதல் கட்டமாக ரூ. 4 கோடி மதிப்பில் 21 லட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இளைஞர்களுக்கு பயிற்சி: கிராமப்புற இளைஞர்கள் சுயதொழில் தொடங்கும் வகையில், ரூ.42.9 லட்சம் மதிப்பில் ஆண்டுதோறும் 600 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த ஆறுமாத கால பயிற்சி வேளாண் பொறியியல் துறை மூலமாக அளிக்கப்படும்.

விருது அறிவிப்பு: திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை கடைப்பிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சிறப்பு விருது ஒன்று உருவாக்கப்படும். மேலும், ரூ.5 லட்சம் பரிசும் வழங்கப்படும். இந்த விருதும், பரிசும் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று அளிக்கப்படும்.

வணிக வளாகங்கள்: திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் பகுதியில் ரூ.4 கோடி செலவில் வாழை மற்றும் இதர காய்கறிகளுக்காகவும், ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் பகுதியில் ரூ.4 கோடி செலவில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்காகவும் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் அமைக்கப்படும். காய்கறி மற்றும் பழங்களுக்கென தேனி, திருச்சி, புதுக்கோட்டை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களிலும், புளிக்கென தருமபுரி மாவட்டத்திலும், மிளகாய், எலுமிச்சைக்கென திருநெல்வேலி மாவட்டத்திலும் ரூ.11 கோடி மதிப்பில் குளிர்பதன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகள் ஏற்படுத்தப்படும்.

விவசாயிகளையும்-வியாபாரிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் ரூ.4.8 கோடி செலவில் முதல்கட்டமாக பயன்பாட்டில் இல்லாத ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் வியாபாரிகளுக்கென தனியாக கடைகள் கட்டித் தரப்படும்.

விவசாயிகள் வேளாண் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இப்போது வழங்கப்படும் பொருளீட்டுக் கடன் ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2 லட்சமாக உயர்த்தி அளிக்கப்படும்.

கட்டடங்கள்: சேலம் மாவட்டம் ஆத்தூர், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, ஈரோடு மாவட்டம் பவானி ஆகிய இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு ரூ.3 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்றார் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்.

வன விலங்குகளால் பயிர் சேதமடைந்தால் இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு: ஜெயலலிதா

First Published : 18 Aug 2011 12:07:49 AM IST



சென்னை, ஆக. 17: வன விலங்குகளால் மனிதர்களுக்கும், உடமைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகையை தமிழக அரசு உயர்த்தியுள்ளது. இதற்கான அறிவிப்பை முதல்வர் ஜெயலலிதா புதன்கிழமை வெளியிட்டார்.

சட்டப் பேரவை கூடியதும், பேரவை விதி 110-ன் கீழ் அவர் படித்தளித்த அறிக்கை:

மக்கள் தொகை பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வன விலங்குகள் அடிக்கடி

காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைகின்றன.

மனிதர்கள், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். எனவே, வன விலங்குகளுக்கான வாழ்விடங்களை மேம்படுத்துதல், அவை விரும்பி உண்ணும் பயிர்களை வனப் பகுதிகளில் வளர்ப்பது;

வனங்களின் எல்லைப் பகுதிகளில் தடைகள் உருவாக்குவது; மனித உயிர்களுக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடமைகளுக்கும் வன விலங்குளால் ஏற்படும் பாதிப்புக்கு

உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல் திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படும் என பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு: வன விலங்குகளால் மனித உயிரிழப்பு ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.1.5 லட்சத்தில் இருந்து ரூ.3 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றுக்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்துக்கான இழப்பீட்டுத் தொகை இதுவரை ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் என்ற அளவில் வழங்கப்பட்டது. இப்போது ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். சேதம் அடைந்த தென்னை மரங்களுக்கு மரத்துக்கு ரூ.500 என்ற அளவில் இழப்பீடு கொடுக்கப்படும்.

வன விலங்குகளால், ஓட்டு வீடுகள், ஆர்.சி.சி. தகடுகள் கொண்ட வீடுகள், கூரை வீடுகள் எந்த அளவுக்கு சேதம் அடைந்தாலும், இதுவரை ரூ.5 ஆயிரம் மட்டுமே இழப்பீடாக வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை இனி முழுவதும் சேதம் அடைந்த ஓட்டு வீடுகள், ஆர்.சி.சி. வீடுகளுக்கு ரூ.35 ஆயிரமாக வழங்கப்படும். கூரை வீடுகளுக்கு ரூ.10 ஆயிரம் கொடுக்கப்படும். பெருமளவில் பாதிப்புக்கு உள்ளான ஓட்டு வீடு, ஆர்.சி.சி. வீடுகளுக்கு ரூ. 5 ஆயிரமும், கூரை வீடுகளுக்கு ரூ.2 ஆயிரமும், பகுதி சேதம் அடைந்த வீடுகளுக்கு ரூ.1,500-ம் இனி வழங்கப்படும்.

வன விலங்குகளால் ஆடு, செம்மறியாடு, பன்றி போன்ற கால்நடைகள் இழப்பு ஏற்பட்டால் இதுவரை அனைத்துக்கும் ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இனி அந்தத் தொகை கால்நடைக்கு ஏற்றாற் போன்று உயர்த்தி அளிக்கப்படும்.

ஆட்டுக்கு ரூ.2 ஆயிரமும், செம்மறி ஆட்டுக்கு ரூ.1,500-ம், பன்றிக்கு ஆயிரம் ரூபாயும், வழங்கப்படும். கோழி போன்ற வீட்டில் வளர்க்கப்படும் பறவை இனங்களுக்கு இழப்பு ஏற்பட்டால் இதுவரை பறவைக்கு ரூ.30 என்ற அளவில் இருந்து வந்த இழப்பீட்டுத் தொகை, இனி பறவைக்கு ரூ.100 என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும்.

வன விலங்குகளால் உடமைகளுக்கு இழப்பு ஏற்பட்டால், உண்மையான இழப்பின் அளவு அல்லது ரூ.100, இவற்றில் எது அதிகமோ அந்தத் தொகை இழப்பீட்டுத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டது. இனி, வன விலங்குகளால் உடமைகள் இழப்பு ஏற்பட்டால் ரூ.2 ஆயிரம் வரை இழப்பீடு அளிக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

---

தினமலர்

**கடந்த நான்கு ஆண்டுகளில் அமெரிக்காவிற்கான இந்திய முந்திரி ஏற்றுமதி 30 சதவீதம் சரிவு**

ஆகஸ்ட் 18,2011,00:06



பெங்களூர்: இந்தியாவில் இருந்து, அமெரிக்காவிற்கு மேற்கொள்ளப்படும் முந்திரி ஏற்றுமதி, கடந்த

நான்காண்டுகளில் 29.4 சதவீதம் சரிவடைந்துள்ளது. உள்நாட்டில் முந்திரிக் கொட்டை உற்பத்தி குறைந்து, தேவை அதிகரித்துள்ளதால் ஏற்றுமதி குறைந்துள்ளது.

உலகளவில், சில ஆண்டுகளுக்கு முன்புவரை, முந்திரி பயன்பாட்டில் அமெரிக்கா முதலிடத்தில் இருந்து வந்தது. இந்த இடத்தை தற்போது இந்தியா பிடித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, அமெரிக்காவை விட இந்தியாவில் முந்திரி பயன்பாடு அதிகரித்துள்ளது.இந்தியாவில், ஆண்டுக்கு சராசரியாக 2.50 லட்சம் டன் முந்திரி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 1.10 லட்சம் டன் முந்திரி ஏற்றுமதியாகிறது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் மேற்காசிய நாடுகளுக்கு இந்தியா அதிக அளவில் முந்திரிப் பருப்பை ஏற்றுமதி செய்து வந்தது. இந்நிலையில், கடந்த 2003ம் ஆண்டு முதல் வியட்நாம் நாடு, அதிக அளவில் முந்திரியை ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. வியட்நாம், இந்தியாவை விட குறைந்த விலைக்கு முந்திரியை விற்பனை செய்து, அமெரிக்க சந்தையை கைப்பற்றிக் கொண்டது. இதுவும், அமெரிக்காவிற்கு, இந்தியாவின் முந்திரி ஏற்றுமதி குறைந்ததற்கு காரணமாகும்.கடந்த 2007-08ம் நிதியாண்டில், இந்தியாவில் இருந்து 42 ஆயிரத்து 694 டன் முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, அடுத்து வந்த ஆண்டுகளில் குறைந்து, சென்ற 2010 -11ம் நிதியாண்டில், 30 ஆயிரத்து 100 டன்னாக வீழ்ச்சி கண்டுள்ளது. ஆக, கடந்த 4 ஆண்டுகளில், அமெரிக்காவிற்கான இந்தியாவின் முந்திரி ஏற்றுமதி 29.4 சதவீதம் சரிவடைந்துள்ளது.

அமெரிக்கா, கடந்த 2009-10ம் நிதியாண்டில், சர்வதேச சந்தையில் இருந்து 1.17 லட்சம் டன் முந்திரியை இறக்குமதி செய்து கொண்டது. இதில் இந்தியாவின் பங்களிப்பு 30 ஆயிரம் டன் என்ற அளவில் இருந்தது.சென்ற 2010-11ம் நிதியாண்டில், அமெரிக்காவின் முந்திரி இறக்குமதி அதிகரித்து, 1.26 லட்சம் டன் என்ற அளவிற்கு உயர்ந்தது. ஆனால், இதில் இந்தியாவின் பங்களிப்பு, 30 ஆயிரத்து 100 டன் என்ற அளவிற்கே அதிகரித்திருந்தது.அமெரிக்காவிற்கான இந்தியாவின் முந்திரி ஏற்றுமதி, அளவில் மட்டுமின்றி மதிப்பின் அடிப்படையிலும் குறைந்துள்ளது. டாலருக்கு எதிரான ரூபாயின் வெளிமதிப்பு உயர்வால், கடந்த 2007-08 ம் நிதியாண்டில் இந்தியாவின் முந்திரி ஏற்றுமதி வாயிலான வருவாய் 838 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருந்தது.

இது, 2008-09ம் நிதியாண்டில் 975 கோடி ரூபாயாகவும், 2009-10ம் நிதியாண்டில் 806 கோடி ரூபாய் என்ற அளவிலும் இருந்தது.அமெரிக்காவிற்கான முந்திரி ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள சரிவு, நடப்பு 2011-12ம் நிதியாண்டிலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில், சென்ற ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாதங்களில், இந்தியாவில் இருந்து 275 கோடி ரூபாய் மதிப்பிலான 7,000 டன் முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவைப் போல் ஆஸ்திரேலியாவிற்கான நம் நாட்டின் முந்திரி ஏற்றுமதியும்

சரிவடைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில், ஆஸ்திரேலியாவின் மொத்த முந்திரி பருப்பு இறக்குமதியில், இந்தியாவின் பங்களிப்பு 90 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 10 சதவீதம் என்ற அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளுக்கான முந்திரி ஏற்றுமதி குறைந்துள்ளதால், இந்திய ஏற்றுமதியாளர்கள், ஜப்பான் மற்றும் மேற்காசிய பிராந்தியத்தை உள்ளடக்கிய 65 நாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதியில் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

வியட்நாம், அமெரிக்காவிற்கு மட்டும் ஏற்றுமதி செய்து வருவதால், இந்நாடுகளில் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு போட்டி குறைவாகவே உள்ளது.இந்தியாவின் முந்திரிக் கொட்டை உற்பத்தி, ஆண்டுக்கு 5 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இது தவிர, 7 லட்சம் டன் முந்திரிக் கொட்டை இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் முந்திரிக் கொட்டை உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க மத்திய, மாநில அர"கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்திய ஏற்றுமதி நிறுவனங்கள், ஆண்டுக்கு 18 லட்சம் டன் அளவிற்கு முந்திரிக் கொட்டையில் இருந்து முந்திரியை பிரித்து, பதப்படுத்தும் திறன் கொண்ட தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளன. இத் தொழிற்சாலைகளின் முழு உற்பத்தி திறனை பயன்படுத்திக் கொள்ளும் வகையில், முந்திரிக் கொட்டைகள் தாராளமாக கிடைக்க அர" வழி செய்ய வேண்டும் என்று ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

நடப்பு நிதியாண்டில், பிரேசில்,வியட்நாம் நாடுகள் அதிக அளவில் முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்து வருகின்றன. வியட்நாம், 3.25 லட்சம் டன்னும், பிரேசில் 40 ஆயிரம் டன் என்ற அளவிற்கும் முந்திரிக் கொட்டையை இறக்குமதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், இந்தியாவின் முந்திரிக் கொட்டை இறக்குமதியில் ஒரு லட்சம் டன் குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இந்தியாவின் முந்திரி பதப்படுத்தும் தொழில் மேலும் பாதிக்கப்படும் என்ற அச்சப்பாடு எழுந்துள்ளது.

**காஃபி சாகுபடிக்கு ரூ.15 லட்சம் நிதி ஒதுக்கீடு : வத்தல் மலை கிராமத்தில் 150 ஏக்கர் சாகுபடிக்கு இலக்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,01:10 IST

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த வத்தல்மலை கிராமத்தில் 150 ஏக்கரில் காஃபி பயிர் சாகுபடி செய்ய 15 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
தர்மபுரி யூனியன் கொண்டகரஅள்ளி பஞ்சாயத்துக்கும், மொரப்பூர் யூனியன் சுங்கரள்ளி பஞ்சாயத்துக்கும் உட்பட்ட கிராமம் வத்தல் மலை. இக்கிராமம் ஏழு குக்கிராமங்களை

உள்ளடக்கியது. இப்பகுதியில் 500 மலைவாழ் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். 2,500 பேர் மக்கள் தொகை உள்ளனர். 200 ஹெக்டர் பரப்பில் விவசாயம் பிரதான தொழிலாக நடந்து வருகிறது. இந்த மழைக்கு வத்தல் மலை மற்றும் பால்சிலம்பு ஆகிய இரு இடங்களில் நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. இதில், 350 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சாமை, ராகி போன்ற குறைந்த வருவாய் தரக்கூடிய பயிர்கள் மட்டுமே மானாவாரி சாகுபடி செய்கின்றனர். கிணறு, ஆழ்துறை கிணறு போன்றவை இது வரையில் செய்து நீர் பாசனத்துக்கு பயன்படுத்தவில்லை. இக்கிராம மக்கள் மருத்துவ வசதி, கால்நடைகளுக்கான மருத்துவ வசதிக்கும் நகரப்பகுதியை நாடி வரும் நிலையுள்ளது.

காய்கறிகள், பழ வகைகள் போன்ற சாகுபடி செய்ய வாய்ப்புகள் அதிகம் இருந்தும் சாலை வசதி, போக்குவரத்து வசதி ஆகியவை இல்லாமல் பயிர் சாகுபடி செய்ய முடியவில்லை. இப்பகுதியில் 3,800 அடி உயரத்தில் உள்ளதால், காஃபி சாகுபடிக்கு ஏற்ற மண் வளம் என மத்திய அரசின் காஃபி வாரியம் சான்று அளித்துள்ளது.

ஒரு சில மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் தோராயமாக 50 ஏக்கரில் நிலப்பகுதியில் காபி சாகுபடி செய்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றனர். இவற்றின் மூலம் ஏக்கருக்கு 50,000 முதல் 75,000 வரை வருமானம் பெறக்கூடிய வாய்ப்புள்ளது.

காஃபி சாகுபடியை வத்தல் மலை விவசாயிகள் சீரிய முறையில் சாகுபடி செய்ய வத்தல் மலை பெரியூரில் காபி சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம் வேளாண் துறை மூலம் நடத்தப்பட்டது. மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ராமமூர்த்தி வரவேற்றார். ஏற்காடு காபி வாரிய விரிவாக்க ஆய்வாளர் ரத்தினம், காஃபி நாற்று தயாரிக்கும் தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

காஃபி வாரிய முதன்மை தொடர்பு அலுவலர் பெரியசாமி, காபி வாரியத்தில் உள்ள திட்டங்கள், மானியங்கள் குறித்தும், தோட்டக்கலை துறை அலுவலர் இந்திரா காந்தி, தோட்டக்கலை துறையில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்தும், திட்ட மேலாளர் மாது, இத்திட்டத்தின் சீரிய முறையில் செயல்படுத்துவது குறித்து விளக்கினார்.

வத்தல் மலை கிராமத்தில் மழைவாழ் மக்கள் காஃபி சாகுபடி செய்ய 15 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 150 ஏக்கரில் காஃபி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வத்தல்மலை பகுதி விவசாயிகள் இந்த பருவத்தில் காஃபி நாற்றுகளை நடவு செய்து பயன்பெறுமாறு முகாமில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**கரும்பு சாகுபடி கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,00:01 IST

தேனி : தேனியில் கரும்பில் நவீன சாகுபடி குறித்த கருத்தரங்கு கலெக்டர் பழனிசாமி தலைமையில் நடந்தது.
ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை பொதுமேலாளர் சதாசிவம் வரவேற்றார். விவசாய இணை இயக்குனர் இமாம்தீன் முன்னிலை வகித்தார். ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை துணைத்தலைவர்கள் மு.கிருஷ்ணன், சத்தியமூர்த்தி, இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவன முதன்மை மண்டல மேலாளர் மதியழகன், கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் ஹேமா சலோமி, விவசாய பொறியியல்துறை செயற்பொறியாளர் ராஜா, முன்னோடி வங்கி மேலாளர் முருகபிரபு மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**சூறாவளி காற்றால் 60 ஏக்கர் வாழை சேதம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,03:17 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் சூறாவளி காற்றுடன் பெய்த மழையால் 60 ஏக்கரில் வாழை மரங்கள் சாய்ந்தன. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
கோபி சுற்று வட்டாரத்தில் மூன்று நாட்களாக மாலை நேரத்தில் சூறாவளி காற்றுடன் மழை பெய்கிறது. ஆகஸ்ட் 15ம் தேதி நம்பியூர் வட்டாரத்தில் சூறாவளி காற்றுடன் பெய்த மழையால் நம்பியூர், குருமந்தூர், ஆயிபாளையம், காரப்பாடி ஆகிய இடங்களில் 3,000க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விழுந்தன. நேற்று முன்தினம் கோபி, நம்பியூர், திங்களூர், பங்களாபுதூர் உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்தது. வெட்டையம்பாளையம், கூடக்கரை, எலத்தூர், காரப்பாடி, வாவிபாளையம், கரட்டூர் உள்ளிட்ட இடங்களில் 60 ஏக்கர் வரை வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
விவசாயிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக, அதிகளவில் வாழை பயிரிடப்படுகிறது. நேந்திரன், பூவன், கதளி, ரொபஸ்டா, கற்பூரவள்ளி, ரஸ்தாளி,மொந்தன், நெய் பூவன் ஆகிய வாழை ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. மூன்று நாட்களாக சூறாவளி காற்றுடன் மழை பெய்கிறது. பலத்த காற்று அடிப்பதால் வாழை மரங்கள் அடியோடு சாய்கின்றன. வளர்ந்த குலையுடன், அறுவடைக்கு தயாராக உள்ள வாழை மரங்கள் அடியோடு சாய்வதால் கடுமையான நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
நம்பியூர், குருமந்தூர், ஆயிபாளையம், காரப்பாடி, கோபி, கரட்டூர்,வெட்டையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 60 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள 60 ஆயிரம் வாழை மரங்கள் அடியோடு

சாய்ந்துள்ளன. அரசு விலைப்படி ஒரு கிலோ வாழை 33 முதல் 35 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு தாரில் 10 முதல் 15 கிலோ வாழைக்காய் இருக்கும். ஒரு சில தாரில் 25 முதல் 30 கிலோ வரை இருக்கும். ஏக்கருக்கு 20 முதல் 25 டன் வாழை உற்பத்தியாகிறது. தற்போது வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விட்டதால் வாழை விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர். மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு: கோபி 20 மில்லி மீட்டர், டி.என்.பாளையம் 6, ஈரோடு 25, மொடக்குறிச்சி 2, காசிபாளையம், 24, அவல்பூந்துறை 2, கணபதிபாளையம் 11, குருமந்தூர் 20, டி.ஜி.புதூர் 9, காஞ்சிக்கோவில் 37 மி.மீ.

**வேளாண் பல்கலையில் மசாலா பொடி தயாரிக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,01:48 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில், வரும் 24, 25ம் தேதிகளில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண் பல்கலை வெளியிட்ட அறிக்கை: பல்கலையில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிக்கும் பயிற்சி வரும் 24, 25ம் தேதிகளில் அளிக்கப்படுகிறது. இதில், மசாலா பொடிகள், தயார்நிலை பேஸ்ட், காளான் ஊறுகாய், வாழைப்பூ ஊறுகாய், பாகற்காய் ஊறுகாய், கத்தரிக்காய் ஊறுகாய் மற்றும் இனிப்பு - கார வெங்காய சட்னி உள்ளிட்டவை தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் சேர ஆர்வமுள்ளவர்கள் 1,000 ரூபாய் செலுத்தி, தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயர் பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டணத்தொகையை "டீன், வேளாண் இன்ஜினியரிங் கல்லூரி' என்ற பெயரில் வரைவோலையாக, கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் எடுத்து,"பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை வளாகம், மருதமலை ரோடு, கோவை-641 003' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்; வரும் 23ம் தேதிக்குள் பெயரை பதிவு செய்யவேண்டும். விபரங்களுக்கு, 0422-6611268 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெய்தல் அங்காடிகளில் ஒரு டன் மீன் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,02:05 IST

திருப்பூர் : நெய்தல் அங்காடியில் மீன் விற்பனை அதிகரித்து வருகிறது. இதற்கு முன், வாரந்தோறும் 600 கிலோ மீன் மட்டுமே விற்பனையானது; தற்போது ஒரு டன்னாக அதிகரித்துள்ளது. தமிழக மீன்வளர்ச்சி துறை சார்பில் திருப்பூர் புஸ்பா தியேட்டர் அருகில், குமார்

நகர், வீரபாண்டி, அவினாசி பகுதிகளில் மீன் விற்பனை செய்யும் நெய்தல் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. ஆழியாறு, பாலாறு, பவானி உள்ளிட்ட ஆறு அணைகளில் இருந்து ஆற்று மீன் கொண்டு வரப்பட்டு, விற்கப்படுகிறது. காலை 7.00 முதல் மதியம் 2.00 மணி வரை, பச்சை மீன்; மாலை 6.00 முதல் 10.00 மணி வரை மீன் வறுவல் விற்கப்படுகிறது. சுகாதாரமாகவும், விலை குறைவாகவும் இருப்பதால், சுற்றுப்பகுதிகளை சேர்ந்த பெரும்பாலானோர் நெய்தல் அங்காடிகளில் மீன் வாங்க ஆர்வம் காட்டுகின்றனர்.

மீன்வளர்ச்சி துறை அதிகாரிகள் கூறியதாவது: மீன் விற்பனையை வரைமுறைப்படுத்தும் வகையில் நெய்தல் அங்காடிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. திருப்பூரில் முதல்கட்டமாக குமார் நகர், வீரபாண்டி பகுதிகளில் மீன் விற்பனையகம் துவங்கப்பட்டது; மக்களிடம் நல்ல வரவேற்பு ஏற்பட்டதையடுத்து, புஸ்பா தியேட்டர் பகுதி மற்றும் அவினாசியில் புதிதாகஅங்காடி அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் விற்பனை மிகவும் மந்தமாகவே இருந்தது; வாரந்தோறும் அதிகபட்சமாக 600 கிலோ மட்டுமே விற்பனையானது. வெளிமார்க்கெட்களில் மீன் விலை அடிக்கடி ஏற்றம் பெறும்.

கட்லா, ரோகு, மிர்கால் உள்ளிட்ட அனைத்து ரக மீன்களும் ஆற்றுப்பகுதிகளில் இருந்து தட்டுப்பாடு இன்றி கிடைப்பதால், நெய்தல் அங்காடியில் விலை எப்போதும் சீராகவே இருக்கிறது. சுகாதாரம், குறைந்த விலை காரணமாக நெய்தல் அங்காடியில் மீன் வாங்க நுகர்வோர் ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது மீன் விற்பனை அதிகரித்துள்ளது; நான்கு அங்காடியிலும் சேர்த்து, வாரந்தோறும் ஒரு டன் மீன் விற்பனையாகிறது. அதிகளவில் வரவேற்பு ஏற்பட்டுள்ளதால், திருப்பூரில் கூடுதல் அங்காடிகள் திறப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம், என்றனர்.

**பயிர் விளையாத உப்பு நிலங்களில் மண்ணுக்கு சக்தி ஏற்றி பயிர் விளைச்சல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,03:59 IST

ச்தூத்துக்குடி : பயிர்கள் விளையாத நிலங்களில் மண்ணுக்கு சக்தி ஏற்றி அதில் பயிர் விளைச்சல் செய்யும் புதிய திட்டத்தை தமிழக வேளாண்மைத்துறை அறிமுகம் செய்துள்ளது. மாநிலம் முழுவதும் இதற்காக 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்களை சீர்படுத்த அரசு 4 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதில் அதிகப்பட்சமாக தூத்துக்குடி மாவட்டத்திற்கு 600 ஏக்கர் நிலம் சீர்படுத்த நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிமுக அரசு வேளாண்மைத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து புதிய திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீட்டை இந்த துறைக்கு அளிக்கவும் முதல்வர் ஜெ.,முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.இதன் அடிப்படையில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ்

பிரச்னைக்குரிய உப்பு தன்மை கொண்ட உவர் நிலைங்களை சீராக்குவது தான் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மாநிலம் முழுவதும் மொத்தம் 6 ஆயிரத்து 500 ஏக்கரில் உள்ள இதுபோன்ற நிலங்களை சீரமைப்பு செய்வதற்காக மொத்தம் 3 கோடியே 90 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 600 ஏக்கர் பரப்பில் உள்ள உவர் நிலங்களை சீர் செய்ய 36 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தமட்டில் மொத்தம் 12 வட்டாரங்களில் மொத்தம் 29 ஆயிரத்து 960 ஹெக்டேர் உப்புத்தன்மை கொண்ட நிலங்கள் இருப்பதாக வேளாண்மைத்துறை சர்வே மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதிகப்பட்சமாக விளாத்திகுளம் தாலுகாவில் தான் இதுபோன்ற நிலங்கள் இருப்பது தெரியவந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் அரசின் இந்த புதிய திட்டத்தை செயல்படுத்தும் வகையில் கலெக்டர் ஆஷீஷ்குமார் நேரடி மேற்பார்வையில் வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ரஞ்சித்சிங் தன்ராஜ், வேளாண்மை அதிகாரி மார்டின்ராணி மற்றும் வேளாண்மைத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். புதிய திட்டம் குறித்து வேளாண்மைத்துறை வட்டாரங்கள் கூறியதாவது; மண்ணில் 7 முதல் 8.5 பி.எச் அளவு இருந்தால் களர் உவர் உப்பு நிலமாக அவை கருதப்படுகிறது. முதலில் இதற்காக உப்பு தன்மை கொண்ட நிலத்தில் எந்த அளவிற்கு உப்பு தன்மை இருக்கிறது என்பதை மண் பரிசோதனை செய்யப்பட வேண்டும். இதற்காக இரண்டு அடி அந்த இடத்தை தோண்ட வேண்டும். அதில் நல்ல தண்ணீரை தேக்க வேண்டும். இரண்டு, மூன்று நாட்கள் தண்ணீர் தேங்கும் வகையில் அந்த நிலத்தில் தண்ணீர் நிற்க வேண்டும்.தொடர்ந்து தண்ணீர் நிற்கும் போது தண்ணீரில் உப்பு கரைந்துவிடும். அதன் பிறகு ஒரு அடிக்கு ஒரு மண் மாதிரியும், இரண்டாவது அடிக்கு ஒரு மண் மாதிரியும் எடுத்து சோதனை செய்ய வேண்டும். அந்த சோதனையில் அந்த நிலத்தில் உப்பு தன்மை எந்த அளவிற்கு இருக்கிறது என்பது தெரிந்துவிடும்.

அதன் அடிப்படையில் அந்த நிலத்தை சீர் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதலில் சாணம் போன்ற இயற்கை உரங்களை அந்த நிலத்தில் போட்டு உழ வேண்டும். பின்னர் இதற்காக விவசாயிகளுக்கு மண்ணின் அங்ககச்சத்துக்களை அதிகரிக்க மானிய விலையில் வழங்கப்படும் பசுந்தாள் உர விதை போட வேண்டும். அந்த விதை வளர்ந்தவுடன் வளர்ந்த செடிகளுடன் நிலத்தை நன்றாக உழ வேண்டும். அதன் பிறகு ஜிப்சம், நுண்சத்து உரம் உள்ளிட்டவை போட வேண்டும். இந்த நிலத்தில் கட்டாயம் நல்ல தண்ணீர் பாய்ச்சுவதற்கு வடிகால் வசதி ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். வடிகால் வசதி இருந்தால் தான் தண்ணீர் உள்ளே செல்வதற்கும், கழிவு நீர் வெளியே செல்வதற்கும் வசதி ஏற்படும். இந்த பணிகள் செய்வதற்கு தான் அரசு 50 சதவீத மானியம் வழங்குகிறது. இதற்காக ஒரு ஏக்கருக்கு விவசாயிகளுக்கு 6 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. களர் உவர் நிலங்கள் மூலம்

பயன் இல்லாமல் கவலையில் உள்ள விவசாயிகள் தமிழக அரசின் இந்த புதிய சூப்பர் திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக பயிர் செய்து வழக்கமாக எடுக்கும் நிலங்களில் உள்ள மகசூலை பெற முடியும் நிலை உருவாகும் என்று கூறப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உடனடியாக இந்த திட்டத்தின் மூலம் பயன் பெற சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் உள்ள உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தை அணுகுமாறு வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தன்ராஜ், வேளாண்மை அலுவலர் மார்டின்ராணி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழகத்தில் உப்புத்தன்மை கொண்ட நிலங்களை நல்ல விளை நிலமாக மாற்றும் இந்த திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் 600 ஏக்கர், நெல்லை மாவட்டத்தில் 400 ஏக்கர், குமரி மாவட்டத்தில் 100 ஏக்கர் நிலங்கள் சீர் செய்யப்படுகிறது. விழுப்புரத்தில் 550, கடலூர், தர்மபுரி, சிவகங்கையில் தலா 400, ஈரோட்டில் 250, கோவையில் 150, திருச்சியில் 300, கரூர், அரியலூர், பெரம்பலூர், விருதுநகரில் தலா 200, தஞ்சையில் 500, புதுக்கோட்டை, ராமநாதபுரத்தில் தலா 600, மதுரையில் 250 க்கரில் சேர்த்து மொத்தம் 6 ஆயிரத்து 500 ஏக்கரில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக மொத்தம் 3 கோடியே 90 லட்ச ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,01:50 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி வேளாண்மை வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு நெடும்பலம் அரசு விதைப்பண்ணையில் வேளாண் உதவி இயக்குனர் நடேசன் தலைமையில் திருந்திய நெல் சாகுபடி பயிற்சி நடந்தது.
2011 - 2012ம் ஆண்டுக்கு கச்சனம், திருவலஞ்சுழி, வேளூர், சிங்களாந்தி, கட்டிமேடி, கீரைகலூர் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் போது ""குறைந்த விதையளவு, அதாவது இரண்டு கிலோ அல்லது மூன்று கிலோ விதையை பயன்படுத்தி ஒரு ஏக்கர் நிலம் நடவு செய்யலாம் எனவும், பச்சை நாற்று கொண்டு நடவு செய்து பத்து நாட்களுக்கு ஒரு முறை கோனோ விடர் கருவியை கொண்டு களை மிதிக்கப்படுவதால் நாற்றின் வேர்கள் தூண்டப்பட்டு அதிக தூர்கள் உற்பத்தியாவதால், குறைந்தது 60 தூர்கள் முதல் அதிபட்சம் 110 தூர்கள் வரை வளர்வதால் சராசரி மகசூலை விட அதிகபட்சம் இரண்டு மடங்கு வரை உற்பத்தி திறன் கூடுகிறது.
விதை, நாற்றங்கால் அமைத்தால், நடவு ஆகிய சாகுபடி பணியில் கணிசமான செலவினம் குறைகிறது. விளை வண்ண அட்டையை பயன்படுத்தி உரம் இடுவதால் தேவையான நேரத்தில்

தேவையான உரம் அளவோடு பயன்படுத்தி வருவதால் செலவு குறைகிறது. மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து," வேளாண்மை அலுவலர் தெய்வேந்திரன், துணை அலுவலர் தவமணி ஆகியோர் விளக்கமளித்தனர். நெல் சாகுபடி குறித்து பண்ணை மேலாளர் சங்கர் நேரடி விளக்கமும், பயிற்சியும் அளித்தார். இதில், 100 விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். தேசிய உணவு பாதுகாப்பு திட்ட தொழில் நுட்ப உதவியாளர் வேதநாயகி நன்றி கூறினார்.

**திருவள்ளூர் மாவட்டத்தில் மழை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 18,2011,04:09 IST

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று திடீர் மழை பெய்தது. சில நாட்களாக வெயிலின் பிடியில் சிக்கி தவித்த மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். திருவள்ளூர் மாவட்டத்தில் சில நாட்களாக சுட்டெரிக்கும் வெயில் இருந்து வந்தது. இதனால், மக்கள் பகல் நேரம் மட்டுமின்றி, இரவு நேரத்திலும் புழுக்கத்தில் சிக்கி தவித்து வந்தனர். குறிப்பாக, குழந்தைகள், பெரியவர்கள், நோயாளிகள் என அனைவரும் அவதிப்பட்டனர். இந்நிலையில், நேற்று மதியம் திடீரென பலத்த மழை பெய்தது.
ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த மழையால், பெரும்பாலான சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், வெப்பத்தின் தாக்கம் தணிந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது. இதனால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஊத்துக்கோட்டை: ஊத்துக்கோட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இரு நாட்களாக பெய்து வரும் பலத்த மழையால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஊத்துக்கோட்டை, சீத்தஞ்சேரி, பென்னலூர்பேட்டை, வெங்கல், பெரியபாளையம் மற்றும் சுற்றியுள்ள இடங்களில் இரு நாட்களாக மதிய வேளையில் மழை பெய்து வருகிறது.
பள்ளங்களில் மழைநீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது. ஊத்துக்கோட்டை பஜார் பகுதி திருவள்ளூர் சாலையில், இரு பக்கமும் வியாபாரிகள் கிராவல் மண் கொண்டு மேடாக்கி உள்ளதால், மழைநீர் செல்ல வழியின்றி தண்ணீர் தேங்கியுள்ளது. நாகலாபுரம் சாலையில் கழிவுநீர் கால்வாயில் ஏற்பட்டுள்ள அடைப்பு காரணமாக கால்வாயிலிருந்து கழிவு நீர் போலீஸ் நிலையம் ஓட்டிய பகுதிக்கு சென்று தேங்கி விடுகிறது. குளம் போல் தேங்கியுள்ள நீரில் கொசுக்கள் உருவாகி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**கோலியனூரில் திசு வாழை விளைச்சல் அமோகம் : முதல் முறையாக விவசாயிகள் சாதனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,21:11 IST

விழுப்புரம் : கோலியனூர் பகுதியில் திசுவாழை (ஜி 9) சாகுபடியில் விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர்.

விவசாய நிலங்கள் பல்வேறு காரணங்களால் குறைந்து வரும் நிலையில், இத்தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கையும் மிக வேகமாக குறைந்து வருகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற போது இருந்த மக்கள் தொகையைப் போல் தற்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு விவசாய வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள் ளன. தானிய வகைகள் மட் டுமின்றி காய்கறி மற்றும் பழ உற்பத்திலும் வேளாண் துறை மூலம் உற்பத்தியை அதிகரிக்க அரசு பல்வேறு புதிய முறைகளையும், சலுகைகளையும் வழங்குகின்றது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் நெல், சோளம், கேழ்வரகு, மணிலா போன்ற பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகள் தற்போது மக்காச்சோளம், மஞ்சள், மரவள்ளி மற்றும் வாழை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். வாழையில் காய் ரகத்தை மட்டுமே பயிர் செய்த விவசாயிகளுக்கு சொற்ப அளவு லாபம் கிடைத்தது. இதனால் (ஹைபிரட்) உயர்ரக விளைச்சல் தரும் காய்கறி, பழ வகைகளை பயிர் செய் வதில் விவசாயிகளை ஈடுபடுத்த தோட்டக்கலை துறை மூலம் விதை, உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளை வழங்குகின்னறர். மேலும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இதனால் தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் குறுகிய காலத்தில் கூடுதல் மகசூல் தரும் தோட்டப் பயிர்கள் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் வெப்ப நிறைந்த பகுதி என்பதால் பழ வாழைகளை சாகுபடி செய்வதில் விவசாயிகள் தயக்கம் காட்டி வந்தனர். இருப்பினும் விழுப்புரம் தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர்செல்வம், கோலியனூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் டாக்டர் வீராசாமி அறிவுரையின் பேரில் விவசாயிகள் பனங்குப்பம் ராஜசேகர், விராட்டிக்குப்பம் சச்சிதானந்தம், பிடாகம் ராஜா உள்ளிட்ட விவசாயிகள் தங்கள் நிலங் களில் 50 சென்ட் பரப்பில் திசு வாழை (ஜி 9) கன்றுகளை (பச்சை வாழைப் பழக் கன்றுகள்) கடந்த ஜூலை மாதத்தில் 2 மீட்டர் இடைவெளி விட்டு நடவு செய்தனர். இதற்கான கன்றுகள் தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டது.

தற்போது அனைத்து மரங்களிலும் வாழை தார்கள் அறுவடை செய்யும் நிலையில் விளைந்துள் ளன. ஒவ்வொரு தாரிலும் 9 முதல் 11 சீப்புகள் காய்கள் உள்ளன. ஒரு வாழை தாரின் எடை சராசரியாக 80 கிலோ வரை உள்ளன. மாவட்டத்தில் முதல்முறையாக அதிக விளைச்சல் உண்டாக்கி கோலியனூர் பகுதி விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர்.

ஒரு ஏக்கர் பரப்பில் திசு வாழை மூலம் கிடைக்கும் 80 டன் பச்சை வாழைப் பழங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றை விழுப்புரம், சென்னை, புதுச்சேரியைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். ஒரு கிலோ வாழை 9 முதல் 10 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகின்றது. இதனால் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 3.5 லட்சம் முதல் 4 லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கின்றது. இதில் விவசாய சாகுபடிக்கு ஏக்கருக்கு 75 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு போனாலும், இரண்டு லட்சம் முதல் 2.5 லட்சம் ரூபாய் வரை நிகர லாபம் கிடைக்கிறது.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் தற்போது திசு வாழை சாகுபடி செய்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். திசுவாழை சாகுபடிக்கு தேவையான வாழைக் கன்றுகள் மாவட்ட தோட்டக்கலை துறை மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றது. இருப்பினும் விவசாயிகள் பலர் ஒன்று சேர்ந்தோ அல்லது தனி நபரோ 5 ஏக்கர் வரை ஒரே இடத்தில் திசுவாழை சாகுபடி செய்தால் கூடுதல் லாபத்திற்கு விற்பனை செய்ய வாய்ப்புகள் உண்டு. மேலும், வாழை கொள்முதல் செய்ய அரசு முன் வந்தால் அதிக விவசாயிகள் கூடுதல் பலன் பெற அதிக வாய்ப்பு உருவாகும்.

**விவசாயிகள் கணக்கெடுப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,21:41 IST

மதுரை : டி.கல்லுப்பட்டி வேளாண்மை கோட்டத்தில் சிறு, குறு விவசாயிகளின் வருவாய், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அடிப்படை புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படுகிறது.
மண் மாதிரியில் நுண்ணூட்டச் சத்துக்களை அறிந்து உரமிட, மண் மாதிரிக்கு 20 ரூபாய் செலுத்தி, தன்மையை அறியலாம். வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலை நெல், பயறு வகைகள், நிலக்கடலை, கம்பு விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. "அட்மா' விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் கிளாங்குளம், என்.முத்துலிங்காபுரம், சின்னையாபுரம், நரசிங்காபுரம், எஸ்.பாரைப்பட்டியில் நெல், பயறு, சிறுதானியங்கள், நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பம் பற்றி வேளாண் விஞ்ஞானிகள் மூலம் பயிற்சி அளிக்கப்படும். அ.தொட்டியபட்டியில் பயறு சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது என வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார்.

**நெல் பயிரில் அந்துப்பூச்சி தாக்குதல் : கட்டுப்படுத்த செய்ய வேண்டியது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 17,2011,23:57 IST

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டு ள்ள நெல் பயிரில் அந்துப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. அந்துப்பூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயத்துறை உதவி இயக்குநர் (பொ) ராமராஜ் கூறியுள்ளதாவது: வயல்களில் தற்போது அந்துப்பூச்சிகளின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. அந்து பூச்சிகள் மஞ்சள் நிறமாக இருக்கும். இலையின் நுனிப்பகுதியில்,மேற்பரப்பில் இளம் மஞ்சள் நிறமுடைய முட்டைகளை குவியல் குவியலாக இட்டு பழுப்பு நிற ரோமங்களால் மூடும். புழுக்கள் இளம் மஞ்சள் நிறத்தில் இருக்கும். மெல்லிய நூலிழையில் ஊசலாடுவதை காணலாம்.

தாக்கப்பட்ட தண்டுகளில் சிறு துவாரத்தையும், தண்டினுள்ளே புழுவையும் அதன் கழிவையும் காணமுடியும். நடவு வயலில் இதன் தாக்குலால் நடுக்குருத்து காய்ந்திருக்கும். வயல்களில் நடுவே விளக்குப்பொறியினை வைத்து, இப்பூச்சியின் வரவை முன்கூட்டி அறியலாம். இளம்பருவத்தில் ஒரு சதுர மீட்டருக்கு 10 சதவீதம் குருத்துக்களுக்கு கீழ் காய்ந்திருந்தால், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவையில்லை. கதிர் வெளிவரும் பருவத்தில் ஒரு சதுர மீட்டருக்கு 2 சதவீத வெண்கதிர் இருந்தால் முட்டைக்குவியலை அழிக்கலாம்.

சரியான இடைவெளியில் நாற்றுகளை நடவேண்டும். அறுவடைக்குப் பின் நிலத்தை உழவு செய்ய வேண்டும். விளக்கு பொறிகளை வைத்து, தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். முட்டை, புழு ஒட்டுண்ணிகள் மூலமும் கட்டுப்படுத்தலாம். ஒரு ஏக்கருக்கு மோனோகுரோட்டாபாஸ் 200 மில்லி அல்லது குயினால்பாஸ் 400 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு கூறியுள்ளார்.

---

**சாயக்கழிவு நீரால் மாசுபட்ட நொய்யல் ஆற்றுப்பாசன பகுதியில் வனத்தோட்டங்கள் உருவாக்கப்படும் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தகவல்**

*சென்னை,ஆக.18–*

*சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட நொய்யல் ஆற்றுப்பாசன பகுதி நிலத்தில் வனத்தோட்டங்கள் உருவாக்கப்படும் என்று அமைச்சர் எஸ்.பி.வேலுமணி சட்டசபையில் தெரிவித்தார்.*

*வனத்தோட்டங்கள்*

*தமிழக சட்டசபையில் நேற்று தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான உறுப்பினர்களின் விவாதத்திற்கு தொழில்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பதில் அளித்து பேசும்போது சில அறிவிப்புகளை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:–*

★ *நாள் ஒன்றுக்கு 100 டன் மெல்லிதழ் காகிதம் (டிஸ்யூ பேப்பர்) தயாரிக்கும் ஆலை ஒன்றை ரூ.200 கோடி முதலீட்டில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவும்.*

★ *திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் சாயக் கழிவு நீரினால் மாசுபட்ட நிலங்களில் வனத்தோட்டங்களை உருவாக்க தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் முயற்சி மேற்கொள்ளும். இந்தத் தோட்டங்களில், நில சீர்திருத்த முறைகளைக் கையாண்டு கூழ்மரங்கள் பயிரிடப்பட உள்ளது. இதனால், உவர் மண்ணின் தன்மையில் முன்னேற்றம் ஏற்பட்டு சாகுபடிக்கு உகந்ததாக மண் மாற்றம் பெறும்.*

*இந்த நிறுவனம், நடப்பாண்டில் உவர்தன்மையை தாங்கி வளரக்கூடிய கூழ்மர ரகங்களை தேர்வு செய்து சோதனை அடிப்படையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடும். இந்த திட்டம் வெற்றி பெறும் நிலையில், ஒவ்வொரு ஆண்டும் 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ஏக்கர் வரை நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதியில் விரிவாக்கம் செய்யப்படும்.இந்த திட்டத்தில் பங்கு கொள்ளும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டுக்கு ரூ.4 ஆயிரம் என்ற குத்தகைத் தொகையை 6 ஆண்டுகளுக்கு வழங்கும் அதன்பிறகு விவசாயிகள் அவர்கள்*

*விருப்பத்திற்கு ஏற்ப மறுஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.*

*ஒருங்கிணைந்த ஜவுளித் தொழில் பூங்கா*

★ *ஜவுளித்துறை மேம்பாட்டுக்காக டிட்கோ நிறுவனம் (தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்), கோவை மாவட்டம், அன்னூருக்கு அருகில் ஒருங்கிணைந்த ஜவுளித் தொழில் பூங்காவை தனியார் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.*

★ *பழங்கள், காய்கறிகள், வாசனைப் பொருட்கள், செல்லப்பிராணி உணவுகள், கடல்சார் உற்பத்திப் பொருட்கள், மாமிசம் மற்றும் கோழி இறைச்சி மற்றும் அறுவை சிகிச்சை கருவிகளை தூய்மை செய்யும் பொருட்களை வர்த்தகம் செய்கின்ற உள்நாட்டு வியாபாரிகளுக்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோருக்கும் உதவும் வகையில், உணவுப் பொருட்கள் மீது கதிர்வீச்சற்ற மற்றும் சேவைகள் அடங்கிய ஒருங்கிணைந்த வளாகம் ஒன்றை டிட்கோ நிறுவனம் கூட்டுத்துறையில் சென்னைக்கு அருகில் சுமார் ரூ.13 கோடி செலவில் நிறுவப்படும். இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறினார்.*

## பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறப்பு சர்க்கார்பதியில் மின் உற்பத்தி தொடங்கியது



சர்க்கார்பதி நீர்மின் நிலையத்தில் இருந்து திருமூர்த்தி அணைக்கு காண்டூர் கால்வாய் வழியாக செல்லும் தண்ணீரை பொதுப்பணித் துறையினர் மலர் தூவி வரவேற்ற போது எடுத்த படம்.

*ஆனைமலை,ஆக.18–*

*பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதைத் தொடர்ந்து 6 மாதங்களுக்கு பின்னர் சர்க்கார்பதி நீர் மின்நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.*

பி.ஏ.பி. பாசனத் திட்டம்

பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் முக்கிய அடிப்படை அணையாக சோலையார் அணை விளங்கி வருகிறது. சோலையார் அணையில் இருந்து வெளியேறும் நீர் பரம்பிக்குளம் அணை யில் தேக்கி வைக்கப்படுகிறது. பின்னர் அங்கிருந்து வெளியேற்றப்படும் நீர் சர்க்கார்பதி நீர்மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கு பின்னர் காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல் லப்படுகிறது. திருமூர்த்தி அணையில் இருந்து திருமூர்த்தி நீர்த்தேக்கத் திட்ட பாசனப்பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த திட்டமே பி.ஏ.பி. திட்டம் என்று விவசாயிகளால் அழைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் சமமட்ட கால்வாயாக காண்டூர் கால்வாய் வெட்டப்பட்டது. நீண்ட நாட்கள் ஆகியதாலும், அவ்வப்போது மலைச் சரிவு ஏற்பட்டு காண்டூர் கால்வாய் உடைப்பு காரணமாகவும், காண்டூர் கால்வாய் சுவரில் மரம், செடி, கொடிகளால் வெடிப்பும் ஏற்பட்டு வந்தது. இதனால் திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப்படும் நீரின் அளவுகுறைந்து வந்தது. இதனால் காண்டூர் கால்வாயை சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

சீரமைப்பு பணிகள்

இதைத் தொடர்ந்து காண்டூர் கால்வாய் சீரமைக்கும் பணி ரூ.187 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றது. முதற்கட்டப் பணிகளுக்காக கடந்த 6 மாதங்களாக பரம்பிக்குளம் அணையில் இருந்து தண்ணீர் நிறுத்தப்பட்டு இருந்தது. இதைத்தொடர்ந்து சீரமைப்பு பணிகள் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் வரை நடைபெற்றது. இந்த நிலையில் திருமூர்த்தி நீர்த்தேக்கத்திட்ட 4–வது மண்டலத்திற்கு செப்டம்பர் மாதம் 1–ந்தேதி முதல் தண்ணீர் திறக்க விவசாயிகளின் கோரிக்கையை தொடர்ந்து பொதுப்பணித் துறையினர் முடிவு செய்து உள்ளனர். எனவே, பாசனத்திற்கு தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு முதற்கட்ட சீரமைப்பு பணிகளை ஆகஸ்டு 15–க்குள் முடித்து, 17–ந்தேதி பரம்பிக்குளம் அணையில் இருந்து திரு மூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்துவிடுவது என முடிவு செய்யப்பட்டது.

தண்ணீர் திறப்பு

இதன்படி நேற்று காலை பரம்பிக்குளம் அணையில் இருந்து நேற்று திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. கடந்த 6 மாதங் களுக்கு பின்னர் நேற்ற முதல் முறையாக சர்க்கார்பதி நீர் மின் நிலை யத்திற்கு தண்ணீர் வந்த டைந்தது. மின்உற்பத்திக்கு போதுமான தண்ணீர் வந்ததை தொடர்ந்து மின் நிலையத்தில் மின்

*உற்பத்தி தொடங்கியது. மின் உற்பத்தி செய்த பின்னர் வெளியேற்றப்பட்ட நீர் காண் டூர் கால்வாய் வழியாக 49.3 கிலோ தூரம் உள்ள திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப் படுகிறது.*

*முன்னதாக நீண்ட இடை வெளிக்கு பின்னர் காண்டூர் கால்வாய் தொடங் கும் ஜீரோ பாயிண்ட் பகு திக்கு வந்த தண்ணீரைபொதுப் பணித்துறையினர் சிறப்பு பூஜை செய்து தண்ணீரில் மலர் தூவி வரவேற்று திரு மூர்த்தி அணைக்கு அனுப்பி வைத்தனர்.இந்த நிகழ்ச்சியில் செயற் பொறியாளர் செல்வ ராஜ், உதவி செயற்பொறியா ளர்கள் குழந்தைசாமி, தாமோ தரன், முருகேசன், உதவி பொறியா ளர்கள் ஜெயராமன், பொன் னுச்சாமி, முருகேசன், ஜெயக் குமார், சுப்பிரமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

*மின் உற்பத்தி*

*இதுகுறித்து பொதுப் பணித் துறையினர் கூறியதாவது:–*

*பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டு உள்ளது. இதனால் சர்க்கார் பதி நீர் மின்நிலையத்தில் முதற்கட்டமாக 12 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதன் பின்னர் வெளியேறும் உபரி நீர் வினாடிக்கு 850 கன அடி வீதம் காண்டூர் கால்வாய் வழி யாக திருமூர்த்தி அணைக்கு கொண்டு செல்லப் பட்டு வரு கிறது. படிப்படியாக மின் உற்பத்தி அதிகரிக்கப்பட உள் ளது. கால்வாயின் நிலை மையை கண்காணித்து தண் ணீர் அதிகரிப்பது குறித்து முடிவு செய்யப்படும். 16 முதல் 8 மணி நேரத்தில் தற்போது திறந்துவிடப்பட்டு உள்ள நீர் சென்றடைந்து விடும்.இவ்வாறு அவர்கள் தெரி வித்தனர்.*

## தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி உயரும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதியில், ஜூலை–டிசம்பர் மாத காலத்தில் விறுவிறுப்பு ஏற்படும் என தென்னிந்திய பெருந்தோட்டப் பயிர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*ஆறு மாதங்களில்...*

*ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாதங்களில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 18 சதவீதம் குறைந்து 7.46 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. தென் மாநிலங்களின்*

*தேயிலை ஏற்றுமதி சரிவடைந்ததே நாட்டின் தேயிலை ஏற்றுமதி ஒட்டுமொத்த அளவில் குறைந்ததற்கு காரணம் என்று கூறப்படுகிறது.*

*மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்காவில் நிலவிய குழப்பங்கள் காரணமாக நடப்பாண்டின் முதல் அரையாண்டு முழுவதும் தேயிலை ஏற்றுமதி மந்தமடைந்திருந்தது. இப்போது அந்த பிராந்தியங்களில் இயல்பு நிலை திரும்பி வருவதால், தேயிலைக்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இரண்டாவது அரையாண்டில் ஏற்றுமதி சூடுபிடிக்க வாய்ப்புள்ளது என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.*

*ஜூன் வரையிலான ஆறு மாதங்களில் வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி 2.39 கோடி கிலோ அதிகரித்துள்ளது. அதே சமயம் கென்யாவில் உற்பத்தி 3.45 கோடி கிலோ சரிவடைந்துள்ளது. உலக அளவிலும் தேயிலை உற்பத்தி 2.06 கோடி கிலோ குறைந்தது.*

*ஏல மையங்கள்*

*இது போன்ற காரணங்களால் சர்வதேச சந்தையில் சப்ளை குறைந்தது. எனவே உலகம் முழுவதுமாக ஏல மையங்களில் தேயிலை விலை உயர்ந்தது. இந்நிலையில், இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிப்பதற்கும், ஏற்றுமதியாளர்களின் வருவாய் கணிசமாக உயர்வதற்கும் வாய்ப்புகள் உருவாகி உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.*

## சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களில் ரூ.17 கோடியில் காய்கறி விற்பனை மையம் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அறிவிப்பு

*சென்னை, ஆக.18–*

*சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களில் ரூ.17 கோடி மதிப்பில் காய்கறி விற்பனை மையங்கள் தொடங்கப்படும் என்று அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.*

*வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்போது, அறிவிப்புகளை வெளியிட்டு வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*213 புதிய வாகனங்கள்*

*வேளாண்மை துறையில் வட்டார அளவில் 1991–ம் ஆண்டுக்கு பிறகு புதிய வாகனங்கள் வாங்கப்படாததால், அனைத்து வாகனங்களும் தற்போது பழுதடைந்த*

நிலையில் உள்ளன. இதன் விளைவாக, விவசாயிகளுக்கும், விரிவாக்க அலுவலர்களுக்கும் இடையே பெருத்த இடைவெளி ஏற்பட்டு, வேளாண் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதற்கு புத்துயிர் ஊட்டும் வகையில், முதல்–அமைச்சர் ஜெயலலிதா முதற்கட்டமாக 213 புதிய வாகனங்கள் வாங்க அனுமதி அளித்துள்ளார். வேளாண்மை துறையின் பணிகளை விரைந்து செயல்படுத்தவும், பல புதிய வேலைவாய்ப்புகளை வேளாண் பட்டதாரிகளுக்கு அளிக்கவும் மத்திய அரசின் அட்மா திட்டத்தின் கீழ், அயல்பணி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் 1300 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

சிறப்பு விருது

வேளாண்மை துறையின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து, முதற்கட்டமாக 15 கோடி ரூபாய் செலவில் 10 உழவர் மையங்கள் அமைக்கப்பட உள்ளது. திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன்பெறும் விவசாயிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில், சிறப்பு விருது ஒன்றினை உருவாக்கவும், 5 லட்சம் ரூபாய் பரிசு வழங்கவும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இந்த விருதும், பரிசும் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தில் வழங்கப்படும்.

எந்திரமயமாக்கல் மூலம் வேளாண்மை உற்பத்தியை பெருக்கும் வகையில், புதிய நவீன வேளாண் கருவிகள் மற்றும் எந்திரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு அனைத்து அரசு விதைப் பண்ணைகள் மூலம் 1.44 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். இதுதவிர, 28.59 கோடி ரூபாய் மதிப்பில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமும், 40 கோடி ரூபாய் மதிப்பில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலமும் பல்வேறு வகையான கனரக எந்திரங்கள் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படும்.

6 மாத கால பயிற்சி

கிராமப்புற இளைஞர்கள் சுயதொழில் தொடங்கும் வகையில், 42.90 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆண்டுதோறும் 600 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகள் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த 6 மாத கால பயிற்சியை வேளாண் பொறியியல் துறை மூலம் அளிக்கப்படும்.

விவசாயிகள் உடனுக்குடன் விதைகள், தரமான உரங்கள் மற்றும் தட்பவெப்பநிலை குறித்த விவரங்களை விரைவாக தெரிந்துகொள்ளும் வகையில், 1.22 கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் துறையில் உள்ள 59 ஆய்வகங்கள் மற்றும் இதர

அலுவலகங்களுக்கு அகண்ட அலைவரிசையுடன் கூடிய கணினி வசதி ஏற்படுத்தப்படும்.

விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

விவசாயிகளுக்கு தரமான விதைகளை உற்பத்தி செய்து உரிய காலத்தில் வழங்கும் வகையில், 10 மாவட்டங்களில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்கள் 5.25 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும். இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திடும் வகையில், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத புதுமையான திட்டத்தை, 4 கோடி ரூபாய் மதிப்பில், மண்வளம், உரப் பரிந்துரை, இடுபொருள் விநியோகம், நுண்ணூட்டச் சத்துக்கள் போன்ற விவரங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கையேடு ஒன்றினை 21 லட்சம் விவசாயிகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படும்.

பெருநகர மக்களின் அன்றாட காய்கறி தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 17 கோடி ரூபாய் மதிப்பில், சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களில் காய்கறி விற்பனை மையங்கள் தொடங்கப்பட்டு, பெருநகர மக்களுக்கு காற்கறிகள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

மலர் சாகுபடி

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு தோட்டக்கலைப் பண்ணையில், 2 கோடி ரூபாய் மதிப்பில் மலர்கள் மற்றும் காய்கறி பயிர்கள் பசுமைக் குடில்களில் சாகுபடி செய்யப்படுவதுடன், மலர் சாகுபடிக்கு மாதிரி செயல் விளக்க மையமும் அமைக்கப்படும்.

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சேமித்து, பாதுகாத்து, விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக்கூட சேமிப்பு கிடங்குகள் உதவுகின்றன. விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், 82 கோடி ரூபாய் மதிப்பில் 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நவீன கிடங்குகள் அமைக்கப்பட உள்ளது.

குளிர்ப்பதன வணிக வளாகம்

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் பகுதியில் 4 கோடி ரூபாய் செலவில் வாழை மற்றும் இதர காய்கறிகளுக்காகவும், ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் 4 கோடி ரூபாய் செலவில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்காகவும் குளிர்ப்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் அமைக்கப்படும்.

காய்கறி மற்றும் பழங்களுக்கென தேனி, திருச்சி, புதுக்கோட்டை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களிலும், புளிக்கென தருமபுரி மாவட்டத்திலும், மிளகாய் மற்றும் எலுமிச்சைக்கென திருநெல்வேலி மாவட்டத்திலும் 11 கோடி ரூபாய்

மதிப்பில் குளிர்பதன வசதியுடன் கூடிய சேமிப்பு கிடங்குகள் ஏற்படுத்தப்படும்.

ஒழுங்குமுறை விற்பனை கூடம்

விவசாயிகளையும், வியாபாரிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் 4.8 கோடி ரூபாய் செலவில், முதற்கட்டமாக பயன்பாட்டில் இல்லாத ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளுக்கென தனியாக கடைகள் கட்டித்தரப்படும்.

விவசாயிகள் வேளாண் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தற்போது வழங்கப்படும் பொருளீட்டுக் கடன் ஒரு லட்சத்தில் இருந்து 2 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

சேலம் மாவட்டம் ஆத்தூர், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, ஈரோடு மாவட்டம் பவானி ஆகிய இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 3 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டிடங்கள் கட்டப்படும். இவ்வாறு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசினார்.